**01.02.2024 MCOP.No.12/2022**

**ம.சா. 2 பெயர்:** கீதா

**சாட்சி ஆஜர். பிரமாணம் செய்யயப்பட்டார் 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நாங்கள் பயணம் செய்த போது தலை கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல, இருவரும் அணிந்து இருந்தோம். விபத்து தார் ரோட்டில் நடந்தது என்றால் இல்லை, நாங்கள் மண் ரோட்டில் செல்லும் போது மோதி விபத்து ஏற்பட்டது.என் கணவருடைய அஜாக்ரதையாலும் கவனக்குறைவாலும் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, மெதுவாக தான் சென்றோம். என் கணவர் ஓட்டி வந்த வாகனத்திற்கு காப்பீடு உள்ளது. மேற்படி என் கணவர் பெயரில் உள்ள வாகனத்திற்கு உறிய ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளோம். நான் கூறுவது போல் காப்பீடு எதுவும் இல்லை என்றாலும், ஆகவே அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தையல் தொழில் செய்கிறேன். மாதம் ரூ.25,000/- சம்பாதித்து வருகிறேன். மாதம் ரூ.25,000/- ஈட்டி வருவதற்கு கணக்கு உள்ளதா என்றால் இல்லை. நான் கூறுவது போல் ரூ.25,000/- சம்பாதிக்கவில்லை என்றால் சரியல்ல. தற்போது ஆரோக்கியமாக உள்ளேன் என்றால் சரியல்ல, அடிப்பட்ட இடங்களில் தற்போது வலி இருந்து வருகிறது. கோரிய தொகை மிகவும் அதிகமானது என்றால் சரியல்ல.

**1 -ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த பகுதி வளைவான பகுதி. வளைவான பகுதிக்கு முன்னும் பின்னும் வேகத்தடை உள்ளது என்றால் தெரியாது. வளைவில் வாகனங்கள் பொறுமையாக தான் வரும் என்றால் எதிரில் வந்த வாகனம் வேகமாக வந்தது. 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தை மெதுவாக தான் ஓட்டி வந்தார் என்றாலும், எனது கணவர் வாகனத்தை வேகமாக ஓட்டி சென்று விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்றாலும் சரியல்ல.

Subordinate Judge

SENTHIL KUMAR RAJAVEL

Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uthangarai